முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

S.C.No.189/2023

LW–14 (PW –7)

| | | | |
|---|---|---|---|
| பெயர்; | ரவி | மதம் | |
| த.பெ. | ராமகிருஷ்ணன் | தொழில் | |
| ஊர் | சென்னை | வயது | 67 |
| மாவட்டம் | சென்னை | தேதி | 06/03/2026 |

இன்று (06.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

2 முதல் 4 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 2015ம் ஆண்டு செஞ்சி காவல் நிலையத்திலிருந்து பணி ஓய்வு பெற்று தற்போது சென்னையில் வசித்து வருகிறேன் கடந்த 30.4.2013ம் தேதி வளவனூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியிலிருந்தபோது 3.1.2012 அன்று இரவு 10 மணிக்கு தலைமைக் காவலர் 518 சிவாநந்தகுமார் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது கண்ணாயிரம் என்பவரிடமிருந்து பெறப்பட்ட எழுத்து மூலமானபுகாரினை பெற்று இ ந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக வைத்ததை அப்போதைய காவல் ஆய்வாளர் திரு சுகுமார் என்பவர் என்பவர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 4.1.2012 அன்று காலை 8 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அண்ணாமலை மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் வரைபடம் தயார் செய்திருந்தார். அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ14,** வரைபடம் **அ.த.சா.ஆ15**, அன்றைய தினமே பார்வை மகசர் சாட்சிகளை வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் மேலும் புகார்தாரர் கண்ணாயிரம் என்பவைரை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்துள்ளார் பின்னர் அவர் பணி மாறுதலில் சென்று விட்டதால் அவருக்குப் பின் கண்டமங்கலம் காவல் ஆய்வாளர் (பொறுப்பு) வளவனூர் திரு நடராஜன் அவர்கள் இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 10.4.2012 அன்று காலை 11 மணிக்கு கோலியனூர் கூட்டுரோட்டில் வைத்து வழக்கில் எதிரி அறிவு (எ) அறிவழகன், சுரேஷ் (எ) சுக்கு சுரேஷ் என்பவரையும கைதுக்கான காரணம் கூறி கைது செய்தபோது எதிரி அறிவு (எ) அறிவழகன் மற்றும் சுரேஷ் (எ) சுக்கு சுரேஷ் என்பவர்கள் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தெய்வசிகாமணி மற்றும் ரியாஸ் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். அறிவு (எ) அறிவழகன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூல தகவல் **அ.தசா.ஆ16**. சுரேஷ் (எ) சுக்கு சுரேஷ் ஒப்புதல் வாக்குமூல தகவல் **அத.சா.ஆ17**. அறிவு (எ) அறிவழகன் கொடுத்த தகவலின் படி அதே சாட்சிகள் முன்பு 10.4.2012 பகல் 13.30 மணிக்கு கோலியனூர் ரயில்வே கேட் அருகே எடுத்து ஆஜர் செய்த சுமார் 48 கிராம் எடையுள்ள தங்க சங்கிலியை 10.4.2012 அன்று பகல் 13.30 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் **அத.சா.ஆ18**ல் கைப்பற்றியுள்ளார். மேலும் எதிரி அறிவு (எ) அறிவழகன் ஆஜர்படுத்திய கண்டமங்கலம் காவல்நிலைய குற்ற எண்.54/2012 பிரிவு 392 இதச வழக்கில் சம்மந்தப்பட்ட 4 கிராம்

எடையுள்ள தங்க மோதிரம் ஒன்றினை கைப்பற்றுதல் மகசர் **அத.சா.ஆ19**ல் அதே சாட்சிகள் முன்பு கைப்பற்றியுள்ளார். அதன் பிறகு எதிரி சுரேஷ் (எ) சுக்குசுரேஷ் 10.4.2012 15.15மணிக்கு கீழ்பெரும்பாக்கம் ஔவையார் கோவில் தெருவில் அவ்ர் வீட்டு முன்பு ஆஜர் செய்த விழுப்புரம் தாலுக்கா காவல் நிலைய கு.எண்.23/2012 பிரிவு 392 இதச வழக்கில் சம்மந்ததப்பட்ட 64 கிராம் தங்க தாலி சரடு ஒன்றியை கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ20**ல் அதே சாட்சிகள் முன்பு கைப்பற்றியுள்ளார். அதன் பிறகு 10.4.2012 15.45 மணிக்கு எதிரி அறிவு (எ) அறிவழகன் கீழ்ப்பெரும்பாக்கம துரௌபதி அம்மான் கோவில் தெருவில் உள்ள அவரது வீட்டு முன்பிருந்து விழுப்புரம் தாலுக்கா காவல் நிலைய குற்ற எண்.38/2012 பிரிவு 392 இதச வழக்கில் சம்மந்தப்பட்ட 56 கிராம் எடையுள்ள தங்க தாலி சரடு ஒன்றினை **அதசாஆ21**ல் கைப்பற்றியுள்ளார். எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். 48 கிராம் தங்கச் சங்கிலி இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்டது என்பதால் பாரம் 91ல் ஒப்படைத்து சிபி 114/2012 நாள் 11.5.2012 ல் பெற்றுள்ளார் அந்த பாரம் 91 **அத.சா.ஆ22**. அந்த தங்கச் சங்கிலி சிஎம்பி நெ.1926/2012 நாள் 15.5.2012 உத்தரவுப்படி மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. புகார்தாரர் இறப்பின் காரணமாக இந்த வழக்கில் விசாரிக்கப்படவில்லை அதனால் அந்த தங்கச் சங்கிலி ஆஜர்படுத்தி சான்றுப்பொருளாக குறியீடு செய்யவில்லை. இந்த வழக்கில் வேறு வழக்கு சம்மந்தமாக எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்க நகைகள் அதற்குரிய புலன் விசாரணை அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்படைத்துள்ளார். மேலும் இந்த வழக்கில் சாட்சிகள் பாபு, சுப்ரமணி, சங்கர், பன்னீர், அண்ணாமலை, கண்ணாயிரம், தெய்வசிகாமணி, ரியாஸ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருந்தார். பிறகு வளவனூர் காவல் நிலைய காவல் ஆய்வாளராக நான் பொறுப்பேற்ற பிறகு 30.4.2013 அன்று இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி மணிகண்டன் (எ) சின்னா (எ) சின்னமணி என்பவர் வேறு ஒரு வழக்கில் புதுச்சேரி மாநிலம் காலாப்பட்டு சிறையில் இருந்தவரை இந்த வழக்கில் விசாரணைக்காக வேண்டி விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண். 2 அவர்களிடம் மனு தாக்கல் செய்து போலிஸ் காவலில் எடுத்து வளவனூர் காவல் நிலைய குற்றப்பிரிவு அறையில் சாட்சிகள் பிரகாஷ் , லோகநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 7 மணிக்கு விசாரித்தபோது எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அவரது ஒப்புதல் வாக்குமூல தகவல் **அ.த.சாஆ23**. ன் படி 30.4 2013 பகல் 10.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்பு புதுச்சேரி மாநிலம் சின்னையாபுரம் முத்தையால்பேட்டையில் உள்ள எதிரி மணிகண்டன் வீட்டின் பின்னால் இருந்து அவர் எடுத்து ஆஜர் செய்த நீலம், கருப்பு கலந்த டிவிஎஸ். ஸ்கூட்டி வண்டி என். டிஎன்.32 எப் 0684 என்ற வண்டியினை கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ24**ல் அதே சாட்சிகள் முன்பு கைப்பற்றினேன் . நீலம், கருப்பு கலந்த டிவிஎஸ். ஸ்கூட்டி வண்டி என். டிஎன்.32 எப் 0684 ஐ போலிஸ் காவலில் இருந்து இன்றை தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளது **சா.பொ.1** . ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரிவு எதிரி மணிகண்டன் என்பவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் கைப்பற்றிய சான்றுப்பொருளை நீதிமன்றத்திற்கு அனுப்பி சிபி. 175/2013 பெற்று நீதிமன்ற உத்தரவு படி அந்த வண்டியை போலிஸ் காவலில் பெற்று காவல் நிலையத்தில் வைக்கப்பட்டது. பாரம் 91 **அதசாஆ25**. பிறகு எதிரி மணிகண்டன் கொடுத்த தகவலின் படி இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சாத்து (எ) சாத்ராஜ் என்பவரை இந்த வழக்கில் கைது செய்ய நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன். அதன் பிறகு வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச 392, உ/இ 34 வில் எதிரிகள் அறிவு (எ) அறிவழகன், சுரேஷ் (எ) சுக்கு சுரேஷ், மணிகண்டன் (எ) சின்னா (எ)சின்னமணி, மற்றும் சாத்து (எ) சாத்ராஜ் ஆகியோர்கள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எந்த தேதியில் இந்த வழக்கின் கோப்பு எனக்கு புலன் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டது என்றால் 30.4.2013 அன்று ஒப்படைக்கப்பட்டது. இந்த வழக்கில் சம்மந்தப்பட்டதாக சொல்லப்படும் 1 மற்றும் 2 எதிரிகள் சம்மந்தப்பட்ட இடங்களுக்கு நான் சென்று பார்வையிடவில்லை என்றால் சரிதான். எதிரி மணிகண்டன் என்பவர் வீட்டருகே உள்ளவர்களை சாட்சியாக அழைத்தேனா என்றால் இல்லை. ஏற்கனவே புலன் விசாரணை அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டிருந்த சாட்சிகளை நான் மீண்டும் விசாரித்தேனா என்றால் இல்லை. இறந்துபோன புகார்தாரர் கண்ணாயிரம் அவரது புகாரில் கொண்டங்கி, தண்டபாணி, சுப்ரமணின், பாபு ஆகியோர்கள் மீது சந்தேகமாக உள்ளது என்று தெரிவித்துள்ளபடி அவர்களை நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. நான் 2013ல் புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ள போதும் அது நீதிமன்றத்திற்கு 2018ம் ஆண்டு தான் அனுப்பியுள்ளேன் என்றால் நான் 2014ல் காவல் நிலைய்திலிருந்து மாறுதல் ஆகிவிட்ிடேன் அதன் பிறகு பொறுப்பில் இருந்த அலுவலர்கள் தான் காலதாமதமாக நீதிமன்றத்திற்க அனுப்பியுள்ளார்கள. நான் சொல்வது போல் எந்த எதிரிகளையும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யப்படவும் இல்லை அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை, சான்றுபொருட்கள் எதுவும்ி கைப்பற்றப்படவில்லை வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Sd/-. A.Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge,

Villupuram

முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

S.C.No.189/2023

LW-11, (PW -6)

| | | | |
|---|---|---|---|
| பெயர்; | சிவானந்தகுமார் | மதம் | |
| த.பெ. | வேணுகோபால் | தொழில் | |
| ஊர் | காணை | வயது | 58 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 13/02/2026 |

இன்று (13.2.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

2 முதல் 4 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை குவிமுச 317 மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் தற்போது காணை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன் நான் 3.1.2012ம் ஆண்டு வளவனூா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது நிலைய பொறுப்பு அலுவலராக இருந்தபோது கண்ணாயிரம் வயது 55 தகப்பானர் பெயர் அப்பாதுரை நெ. 414 கணபதி நகர் விழுப்புரம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று வளவனூர் காவல் நிலைய குற்ற எண். 21/2012 பிரிவு 392, இதச படி 3.1.2012ம் தேதி 22 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். வழக்கு பதிந்தத பிறகு அசல் முதல் தகவல் அறிக்கையை புகார் மனுவுடன் விழுப்பும் நீதித்துறை நடுவர் எண் 2 முன்பாக சமர்ப்பித்தேன் வழக்கு கோப்பினை ஆய்வாளரின் பார்வைக்கு மேல் நடவடிக்கைக்காக வைக்கப்பட்டது. கண்ணாயிரம் என்பவர் கொடுத்த புகார் **அ.த.சா.ஆ12** முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ13**.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

புகாரில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் வளவனூர் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 4 முதல் 5 கி. மீ தொலைவு இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பிரதான போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் உ்ள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்த காவல் நிலையத்திற்கு அதிக பட்சமாக 30 நிமிடத்தில் வந்துவிட முடியும் என்றால் சரிதான். புகார்தாரர் சுமார் 4 மணி நேரம் காலதாமதமாக காவல் நிலையம் வந்து புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். புகார் பெறப்பட்டதாக நான் இடைச் செறுகலாகத்தான் 22 மணி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் கவனக்குறைவாக பின்னிட்டு எழுதப்பட்டது. புகாரில் புகார்தாரர் தேதி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல 3.1.2012 என்று தேதி குறிப்பிட்டுள்ளார் புகாரின் தலைப்பில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புகாரில் நான் மேலோப்பம் செய்தபோது 379 என சட்டப்பிரிவு குறிக்கப்பட்டு பின்னிட்டு அதில் 392 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையிலும் 392 என்ற பிரிவு எழுதியபோது 2 திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. முதல் தகவல் கிடைக்கப்பட்ட

நேரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான். புகார் சம்மந்தமாக நான் பொது நாட்குறிப்பில பதிந்துள்ளேனா என்றால் பதிந்துள்ளேன். முதல் தகவல் அறிக்கை வரிசை 3 (சி)யில் அது பற்றி நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் அவருடைய புகாரில் அவர் சந்தைக்கு சென்று வந்தபோது கொண்டங்கி என்ற ஊரை சேர்ந்த தண்டபாணி மற்றும் 4 நபர்கள் "நீ வெளியே வாடா உன்னை பார்த்துக்கொள்கிறேன்" என்று மிரட்டி விட்டு சென்றதாக புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வழக்கின் எதிரிகள் பெயரை குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் புகாரில் நகையின் அடையாளம் மற்றும் பணத்தின் விவரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் கண்ணாயிரம் என்பவர் தன்னை சந்தையில் மிர்ட்டியதாக சொல்லப்படும் தண்டபாணியை பழிவாங்கும் நோக்கி பொய்யான சங்கதிகளை கொண்டு கொடுத்த புகாரினை நான் பெற்று்கொண்டு முகாந்திரம் இல்லாத வழக்கில் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல .

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- A. Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge,

Villupuram